# இரண்டாம் பருவ பொதுத் தொகுத்தறித் தேர்வு - 2019

## எட்டாம் வகுப்பு

பதிவு எண் : | | | | | | |

## தமிழ்

நேரம்: 2.00 மணி மதிப்பெண்கள்: 60

**I. அனைத்து வினாக்களுக்கும் விடையளி:** 14 x 1 = 14

அ) பொருள் எழுதுக:

1. பண் -
2. யாணர் -

ஆ) பிரித்து எழுதுக:

3. கோயிலப்பா
4. பாடறிந்து

www.kalviexpress.in

இ) சேர்த்து எழுதுக:

5. பகைவன் + என்றாலும்
6. முறை + எனப்படுவது

ஈ) கோடிட்ட இடங்களை நிரப்புக:

7. என் நண்பர் பெரும்புலவராக இருந்த போதும் _______ இன்றி வாழ்ந்தார்.
8. நம்மை _______ இப் பொறுத்துக் கொள்ள வேண்டும்.
9. அறியாமையை நீக்கி அறிவை விளக்குவது _______
10. பழந்தமிழ் இலக்கியங்களைப் பாதுகாத்து வைத்தவை _______.

உ) பொருத்துக:

11. இயற்கை ஓவியம் - சிந்தாமணி
12. இயற்கை தவம் - பெரியபுராணம்
13. இயற்கைப் பரிணாமம் - பத்துப்பாட்டு
14. இயற்கை அன்பு - கம்பராமாயணம்

**II. கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் ஆறனுக்கு நான்கு வரிகளுக்கு மிகாமல் விடை தருக:**

15. யாருக்கு அழகு செய்ய வேறு அணிகலன்கள் தேவையில்லை? 6 x 2 = 12
16. யாருடைய உள்ளம் மாணிக்கக் கோவில் போன்றது?
17. தமிழ் இசையோடு இணைந்து இசைக்கும் இசைக் கருவிகளாகச் சுந்தரர் கூறுவன யாவை?
18. உழவர்கள் எப்போது ஆரவார ஒலி எழுப்புவர்?
19. தாய்நாடு என்னும் பெயர் எவ்வாறு பிறக்கிறது?
20. பனையோலையால் உருவாக்கப்படும் பொருள்கள் யாவை?
21. மூவேந்தர்களின் காலம் குறித்து எழுதுக.
22. தமிழ்நாட்டின் ஹாலந்து என்று அழைக்கப்படும் ஊர் எது? ஏன்?

**III. அடி பிறழாமல் எழுதுக:** 2 x 2 = 4

23. இதனை - எனத் தொடங்கும் குறள்.
24. கற்றோர்க்கு - எனத் தொடங்கும் நீதிநெறி விளக்கப் பாடல்.

**IV. கீழ்க்காணும் வினாக்களுக்கு எவையேனும் மூன்றனுக்கு நான்கு வரிகளுக்கு மிகாமல் விடை தருக:** 3 x 2 = 6

25. எழுவாய் வேற்றுமையை விளக்கு. www.kalviexpress.in
26. தொகை நிலைத் தொடர்கள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

27. இரவு பகல் என்பது எவ்வகைத் தொடர் என விளக்குக.

28. இயல்பு புணர்ச்சியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

29. மரக்கட்டில் - இச்சொல்லைப் பிரித்து எழுதிப் புணர்ச்சி விதியை விளக்குக.

**V. கீழ்க்காணும் வினாக்களுக்குப் பத்துவரிகளுக்கு மிகாமல் விடை தருக:** 2 x 5 = 10

30. வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய பண்பு நலன்களாக நீங்கள் கருதுவன யாவை?

*(அல்லது)*

மழை வளம் பெருக நாம் செய்ய வேண்டுவன யாவை?

31. திரு.வி.க குறிப்பிடும் பல்துறைக் கல்வியில் நீங்கள் எதனைக் கற்க விரும்புகிறீர்கள்?

*(அல்லது)*

கொங்கு நாட்டின் உள்நாட்டு, வெளிநாட்டு வணிகம் குறித்து எழுதுக.

**VI. கீழ்க்காணும் வினாக்களுக்கு ஒன்றரைப் பக்கத்திற்கு மிகாது விடை தருக:** 2 x 5 = 10

32. திருக்குறளின் கருத்தைப் பின்பற்றி நடந்த சகாதேவன் கதையைச் சுருக்கி எழுதுக.

*(அல்லது)*

காற்றுக் கருவிகள் குறித்த செய்திகளைத் தொகுத்து எழுதுக.

33. கட்டுரை வரைக:

1. நூலகம்

*(அல்லது)*

2. கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள்.

www.kalviexpress.in

**VII. கீழ்க்காணும் விளம்பரத்தைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக:** 1 x 4 = 4

34.

| | |
|---|---|
| சென்னையில்<br>புத்தகச் சங்கமம் | உலக புத்தக நாளை முன்னிட்டு<br>மாபெரும் புத்தகக் கண்காட்சி<br>ஏப்ரல் 13 முதல் 23 முடிய<br>பகல் 2 மணி முதல் இரவு 9 மணி வரை<br>இடம் : இராயப்பேட்டை YMCA மைதானம்<br>அனுமதி இலவசம் / 20% தள்ளுபடி |

1. எந்த நாளை முன்னிட்டுப் புத்தகக் கண்காட்சி நடத்தப்படுகிறது?
2. புத்தகக் கண்காட்சி எங்கு நடைபெறுகிறது?
3. புத்தகக் கண்காட்சி எத்தனை நாள்கள் நடைபெறுகிறது?
4. புத்தகக் கண்காட்சிக்கான நுழைவுக் கட்டணம் எவ்வளவு?
5. புத்தகம் வாங்குவோருக்கு வழங்கப்படும் சலுகை யாது?

*****

www.kalviexpress.in